# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்: 02/மா/2026
நாள்: 16.03.2026

R. மயில்சாமி,
மதுரை. — முறையீட்டு மனுதாரர்

(1) உதவி ஆணையாளர்,
மண்டலம் 2 (வடக்கு),
மதுரை மாநகராட்சி.

(2) ஸ்ரீலட்சுமி மருத்துவமனை,
மதுரை. — எதிர்மனுதாரர்கள்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மயில்சாமி என்பவரின் 05.12.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.12.2023 அன்று பெறப்பட்டு 02/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண் 5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மயில்சாமி என்பவர் தனது 05.12.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

> “மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு), பெத்தானியாபுரம், மெயின் ரோடு, பைபாஸ் ரோடு, குரு தியேட்டர் எதிர்புறம் உள்ள கதவு எண் 87A-ல் இயங்கி வரும் ஸ்ரீலட்சுமி மருத்துவமனை கட்டடம் மூன்று மாடிகளை கொண்ட கட்டடம் இதில் பல படுக்கை அறைகளை கொண்டதும், 24 x 7 மணி நேரமும் செயல்பட்டு வரும் மருத்துவமனையாகும். இம்மருத்துவமனை கட்டடம் அனுமதிக்கு மாறாக கூடுதலாக சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. ஸ்ரீலட்சுமி மருத்துவமனைகட்டடத்திற்கு நான்கு புறமும் இடைவெளி இடம் விடாமல் (Set Back Spaces) சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் ஸ்ரீலட்சுமி மருத்துவமனை கட்டடத்திற்கு வாகனங்கள் நிறுத்துவதற்கு (Parking Spaces) இடம் விடாமல் கட்டடம் கட்டப்பட்டுள்ளதால் மருத்துவமனைக்கு வரும் உள்நோயாளிகள், புறநோயாளிகள் மற்றும் பார்வையாளர்கள் வாகனங்களை மருத்துவமனை முன்பாக ரோட்டில் நிறுத்துவதனால் வாகன போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு விபத்துகளும் ஏற்பட்டு வருகிறது. மேலும் மேற்படி மருத்துவமனை கட்டடம் பொது மக்கள் பயன்பாட்டு கட்டடம் என்பதால் 1973–ஆம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 33–ன்படி அக்கட்டடத்திற்கு நகர் ஊரமைப்பு திட்ட இயக்ககத்தால்

ஒப்புதல் பெறவில்லை. மற்றும் தமிழ்நாடு பொது கட்டடம் (உரிமம்) சட்டம், 1965 பிரிவு 2(8)–ன்படி வருவாய் துறையிடம் உரிமம் பெறாமலும், மற்றும் உரிய அரசு துறைகளிடம் முறையாக அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்ட ஸ்ரீலட்சுமி மருத்துவமனை, பார்க்கிங் இடம் விடாமலும், செட்பேக் இடம் விடாமலும், அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டப்பட்ட மருத்துவமனை கட்டடத்தை தமிழ்நாடு அரசாணை எண் 7, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 10.01.2023–ன்படியும், நகர் ஊரமைப்பு ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண் 21724/2016/BA2, நாள் 03.01.2017–ன் உத்தரவின்படியும் மற்றும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971–ன் பிரிவுகள் 56(1) மற்றும் 57 உடன்படிக்கப்பட்ட பிரிவு 85கீழ் Stop work notice/notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிட்டும் Lock and seal and demolition வழங்கி மற்றும் விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிகத் தாழ்மையுடனும், பணிவன்புடனும் வேண்டிக் கொள்கிறேன்.''

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 28.12.2023 நாளிட்ட கடிதம் மூலம் மதுரை மாநகராட்சி, மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையாளரிடம் கோரப்பட்டது.

3. மதுரை மாநகராட்சி உதவி ஆணையாளர் தன்னுடைய 21.02.2024 நாளிட்ட கடிதம் ந.க. எண் ம2உ2இ2/004789/2023–ல் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"27.09.2023 நாளிட்ட டாக்டர்அ.சித்ரா, கட்டிட உரிமையாளர் என்பவரின் ஆட்சேபணை மனுவில், கட்டிட உரிமையாளர் ஸ்ரீலட்சுமி மருத்துவமனையின் சொத்து தொடர்பான விபரம் குறித்து மூன்றாம் நபருக்கு வழங்கக்கூடாது என ஆட்சேபணை தெரிவித்துள்ளார்.

மதுரை மாநகராட்சி அலுவலக 25.12.2023 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட விவரங்களை தெரிவித்து மனுதாரருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 28.12.2023 நாளிட்ட கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதின் அடிப்படையில், மனுதாரரின் மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விபர அறிக்கையினை இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது என்ற விபரம் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும், மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாம் நாள்தோறும் ஒவ்வொரு வார்டுகளுக்கு நேரடியாக சென்று பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெறுதல் களப்பணி காரணமாக அறிக்கை அனுப்பி வைப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த ஒரு முறை மன்னிக்குமாறும், இனிவரும் காலங்களில் இவ்வாறு நடைபெறாவண்ணம் மனுக்கள் மீது உடனுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

4. ஆனால், மேற்கண்ட கடிதத்தில் தெரிவித்தவாறு மனுதாரரின் மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அறிக்கை ஏதும் பெறப்படாததால், இந்நேர்வு தொடர்பான தற்போதைய விவர அறிக்கையினை இம்முறைமன்ற (Comprehensive Report) நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறு மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையாளருக்கு 18.07.2024 நாளிட்ட கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டும் அறிக்கை அனுப்பாததால், முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 21.01.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி மண்டலம்–2 (வடக்கு)–ன் உதவி ஆணையாளரிடம் கோரப்பட்டது. ஆனால் இதுநாள் வரை எவ்வித அறிக்கையும் பெறப்படவில்லை.

5. இருப்பினும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவ மன்றத்தில் 03.02.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 21.01.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. இந்நிலையில், மனுதாரர் தனது 30.01.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

> ''எனது 05.12.2023 மேல்முறையீட்டு மனு எண் 02/மா/2026 நாள் 21.01.2026 வழக்கின் அறிவிப்பு நோட்டீஸ் கிடைக்கப் பெற்றேன். 03.02.2026 பிற்பகல் 12.15 மணிக்கு நேரடி விசாரணை நடைபெறும் என்று அறிந்து கொண்டேன். எனக்கு முதுகு தண்டுவடம் வலியால் அவதிப்படுவதினால் இப்போது நெடுந்தூரம் பயணம் செய்ய இயலாது என்பதினால் நான் நேரடி விசாரணைக்கு ஆஜராக இயலாது என்பதனை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். எனது புகார் மேல்முறையீட்டு மனுவில் கூறியவாறு, ஸ்ரீலட்சுமி மருத்துவமனை கட்டடம் நான்கு புறமும் பக்க இடைவெளி விடாமலும், கார் பார்க்கிங் இல்லாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971 பிரிவு 56, 57–ன்கீழ் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டும், மருத்துவமனை கட்டிடத்தின் மீது 2 வருடத்திற்கு முன்பாக புகார் அளித்தும் இதுநாள் வரையிலும் நடவடிக்கை எடுக்கத் தவறிய அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.''

7. மேலும், மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையர் தன்னுடைய 02.02.2026 நாளிட்ட கடித எண் ம2/உ2/இ2/004789/2023–ல் தனது அறிக்கையினை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார். அதில்–

> ''மனுதாரர் திரு. R.மயில்சாமி என்பவர் மதுரை மாநகராட்சி, மண்டலம்–2, வார்டு எண் 63, கதவு எண் 210/A, பெத்தானியபுரம், பைபாஸ் ரோடு, ஸ்ரீலெட்சுமி மருத்துவமனை கட்டிடமானது அனுமதிக்கு மாறுதலாகவும், கூடுதலாகவும் கட்டியுள்ள கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்கக் கோரப்பட்டுள்ளது.
>
> மேற்படி மருத்துவமனை கட்டிடத்திற்கு மதுரை மாநகராட்சியால் கட்டிட வரைபட அனுமதி எண் 393/2000, நாள் 03.11.2000–ல் கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
>
> தற்போது இடம் ஆய்வு செய்யப்பட்டதில், மனுதாரர் கட்டிட அனுமதிக்கு மாறுதலாகவும், வரைபடத்தில் காட்டியப்படி பக்க திறவிடம் விடப்படவில்லை. மேலும் ஐந்தாம் தளத்தில் கூடுதலாக 708 ச.அடி அனுமதியின்றி கட்டிடம் கட்டி உள்ளார். எனவே அனுமதிக்கு மாறுதலாக கட்டப்பட்ட கட்டிடத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (தமிழ்நாடு விதி 35) 2022–ல் திருத்தப்பட்டது. பிரிவு 135 (1, 2)–ன் கீழ் அறிவிப்பு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

8. எதிர்மனுதாரர் தரப்பில் மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் நகரமைப்பு ஆய்வாளர் 03.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

> ''மனுதாரர் குறிப்பிட்ட ஸ்ரீலட்சுமி மருத்துவ மனை கட்டிடத்திற்கு மதுரை மாநகராட்சியால் கட்டிட வரைபட அனுமதி எண்.393/2000, நாள் 03.11.2000ல் கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1) மேற்கண்ட மருத்துவமனை கட்டிடத்தை ஆய்வு செய்ததில் கீழ்கண்டவாறு உள்ளது.

| வ. எண். | கட்டிட விவரம் | கட்டிட அனுமதி பெறப்பட்டது | கட்டிடம் கட்டப்பட்ட அளவு | கூடுதலாக கட்டப்பட்ட அளவு |
|---|---|---|---|---|
| 1) | தரைதளம் | 1322 சதுரடி | 1650 சதுரடி | 328 சதுரடி |
| 2) | முதல்தளம் | 1322 சதுரடி | 1600 சதுரடி | 278 சதுரடி |
| 3) | இரண்டாம் தளம் | 1450 சதுரடி | 1600 சதுரடி | 150 சதுரடி |
| 4) | மூன்றாம் தளம் | 1450 சதுரடி | 1350 சதுரடி | -- |
| 5) | நான்காம் தளம் | 1150 சதுரடி | 1350 சதுரடி | 200 சதுரடி |
| 6) | ஐந்தாம் தளம் | -- | 700 சதுரடி | 700 சதுரடி |

மேலும் வரைபடத்தில் காட்டியபடி பக்கதிறவிடமும் விடப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது. மேற்கண்ட மருத்துவமனையின் கட்டிடம் அனுமதிக்கு மாறாக 2000ல் கட்டப்பட்டும் இதுவரை மதுரை மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தற்போது தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (தமிழ்நாடு விதி 35) 2022ல் திருத்தப்பட்டது, பிரிவு 135 (1, 2) –ன் கீழ் அறிவிப்பு வழங்க ஒரு வாரத்திற்குள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

9. இரண்டாம் எதிர்மனுதாரரான ஸ்ரீலட்சுமி மருத்துவமனை சார்பாக வழக்கறிஞர் திரு. K. ஹரிஹரன் என்பவர் 03.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரர் திரு.ஆர்.மயில்சாமி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு 05.12.2023 நாளிட்ட புகார் மனு சமர்ப்பித்தது தொடர்பாக இம்முறை மன்ற நடுவத்தில் விளக்கம் அளிக்கவும், மருத்துவ மனை சார்பாக உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கவும், வேறு ஒரு தேதி வழங்குமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

10. எனவே, இரண்டாம் எதிர்மனுதாரரான ஸ்ரீலட்சுமி மருத்துவமனை உரிமையாளரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவ மன்றத்தில் 24.02.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 10.02.2026 தேதியிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. அதன் நகல் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு), உதவி ஆணையர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டது.

11. இந்நிலையில், மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையர் தன்னுடைய 20.02.2026 நாளிட்ட கடிதம் ம2/உ2இ2/004789/2023–ல் தனது அறிக்கையினை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார். அதில்–

''மனுதாரர் திரு. R.மயில்சாமி என்பவர் மதுரை மாநகராட்சி, மண்டலம்–2, வார்டு எண் 63, கதவு எண் 210/A, பெத்தானியபுரம், பைபாஸ் ரோடு, ஸ்ரீலெட்சுமி மருத்துவமனை கட்டிடமானது அனுமதிக்கு மாறுதலாகவும், கூடுதலாகவும் கட்டியுள்ள கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்க கோரப்பட்டுள்ளது.

இம்மருத்துவமனை கட்டிடத்திற்கு மாநகராட்சியில் அனுமதிபெற்ற வரைபடம் மற்றும் ஆவணங்களை 7 தினங்களுக்குள் சமர்ப்பிக்கும்படி தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதியற்ற கட்டுமானங்கள் அகற்றுதல்) விதிகள் 2022, விதி 3–ன் கீழ் 05.02.2026–ல் கட்டிட உரிமையாளர் திருமதி A. சித்ரா அவர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.

இதனை தொடர்ந்து கட்டிட உரிமையாளரிடமிருந்து உரிய ஆவணங்கள் கிடைக்கப் பெறாததால் 16.02.2026 அன்று கட்டிடம் நேராய்வு செய்யப்பட்டது. நேராய்வின் போது மாநகராட்சியிடமிருந்து கட்டிடம் கட்டுவதற்கு அங்கீகாரம் பெற்ற வரைபடங்கள் ஏதும் சமர்ப்பிக்கவில்லை. எனவே தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதியற்ற கட்டுமானங்கள் அகற்றுதல்) விதிகள் 2022, விதி 5(a)–ன் கீழ் 20.02.2026–ல் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பில் 30 தினங்களுக்குள் கட்டிடத்தை முந்தைய நிலைக்கு மாற்றும்படியும் கட்டிடத்தின் பயன்பாட்டை நிறுத்தும்படியும், தவறினால் நகர் ஊரமைப்புச் சட்டம் 1972 பிரிவு 56 (2–A)–கீழ் கட்டிடத்தை மூடி முத்திரையிட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள காலஅவகாசம் முடிவடைந்த பின்னர் இக்கட்டிடத்தின் மீது சட்டப்படி தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரத்தை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

12. எதிர்மனுதாரர் தரப்பில் மதுரை மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவிப் பொறியாளர் 24.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''இம்முறை மன்ற நடுவத்தில் 03.02.2026 அன்று மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் சார்பாக நகரமைப்பு ஆய்வாளர் அளித்த வாக்குமூலத்தின் தொடர்ச்சியாக பின்வரும் விவரங்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

03.02.2026 அன்று வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு ஸ்ரீலெட்சுமி மருத்துவமனை கட்டிடத்திற்கு மாநகராட்சியில் அனுமதி பெற்ற வரைபடம் மற்றும் ஆவணங்களை 7 தினங்களுக்குள் சமர்ப்பிக்கும்படி தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதியற்ற கட்டுமானங்கள் அகற்றுதல்) விதிகள் 2022, விதி 3–ன் கீழ் 05.02.2026ல் கட்டிட உரிமையாளர் மருத்துவர் திருமதி.A.சித்ரா அவர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. இதனை தொடர்ந்து கட்டிட உரிமையாளரிடமிருந்து உரிய ஆவணங்கள் கிடைக்கப்பெறாததால் 16.02.2026 அன்று கட்டிடம் நேராய்வு செய்யப்பட்டது. நேராய்வின் போது மாநகராட்சியிடமிருந்து கட்டிடம் கட்டுவதற்கு அங்கீகாரம் பெற்ற வரைபடங்கள் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதியற்ற கட்டுமானங்கள் அகற்றுதல்) விதிகள் 2022, விதி 5 (a)-ன் கீழ் 20.02.2026–ல் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பில் 30 தினங்களுக்குள் கட்டிடத்தை முந்தைய நிலைக்கு மாற்றும்படியும் கட்டிடத்தின் பயன்பாட்டை நிறுத்தும்படியும், தவறினால் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 (2–A)-கீழ் கட்டிடத்தை மூடி முத்திரையிட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள கால அவகாசம் முடிவடைந்த பின்னர் இக்கட்டிடத்தின் மீது உரிய சட்டப்படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

13. இரண்டாம் எதிர்மனுதாரரான ஸ்ரீலட்சுமி மருத்துவமனை சார்பாக வழக்கறிஞர் திரு. S. மார்ஷல் என்பவர் 24.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மதுரை மாநகராட்சி மண்டலம் 2, (வடக்கு), பெத்தானியாபுரம் மெயின் ரோடு, பைபாஸ் ரோடு, கதவு எண் 87–ல் அமைந்துள்ள நிலத்தினை மருத்துவமனையின் உரிமையாளரால் 1994ம் வருடம் கிரையம் பெற்று ஸ்ரீலட்சுமி மருத்துவமனை கட்டிடம் கட்டப்பட்டு தற்போது வரை இயங்கி வருகிறது. இக்கட்டிடத்திற்கான வரைப்பட நகல் மருத்துவமனையின் வசம் இல்லாததால், வரைப்படத்தின் நகல் கோரி 20.02.2026 அன்று மதுரை மாநகராட்சி நகரதிட்டமிடுநர் அவர்களுக்கு மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வரைப்படத்தின் நகல் பெறப்பட்ட பின் மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

14. மனுதாரரின் மனு, கடிதம், எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவி ஆணையரின் அறிக்கைகள், நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலங்கள் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரரான ஸ்ரீலட்சுமி மருத்துவமனை சார்பாக வழக்கறிஞர் திரு. S. மார்ஷல் என்பவரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு), பெத்தானியாபுரம், மெயின் ரோடு, பைபாஸ் ரோடு, குரு தியேட்டர் எதிர்புறம் உள்ள கதவு எண் 87A-ல் இயங்கி வரும் ஸ்ரீலட்சுமி மருத்துவமனை கட்டிடமானது, கட்டிட திட்ட அனுமதிக்கு மாறாக கூடுதலாகவும், இக்கட்டிடத்திற்கு நான்கு புறமும் இடைவெளி இடம் விடாமலும் (Set Back Spaces) மற்றும் வாகனங்கள் நிறுத்துவதற்கு (Parking Spaces) இடம் விடாமலும் கட்டப்பட்டுள்ளது என்பதும், இம்மருத்துவமனையில் பார்க்கிங் வசதி இல்லாததால், மருத்துவமனைக்கு வரும் வாகனங்களால் வாகன போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு விபத்துகளும் ஏற்பட்டு வருகிறது என்பதும், மேற்படி மருத்துவமனை கட்டடம் பொது மக்கள் பயன்பாட்டு கட்டடம் என்பதால் 1973–ஆம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 33–ன்படி அக்கட்டடத்திற்கு நகர் ஊரமைப்பு திட்ட இயக்ககத்தால் ஒப்புதல் பெறாமலும், தமிழ்நாடு பொது கட்டடம் (உரிமம்) சட்டம், 1965 பிரிவு 2(8)–ன்படி வருவாய் துறையிடம் உரிமம் பெறாமலும், மற்றும் உரிய அரசு துறைகளிடம் முறையாக அனுமதி பெறாமலும் உள்ள மேற்கண்ட மருத்துவமனை கட்டிடத்தை தமிழ்நாடு அரசாணை எண் 7, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 10.01.2023–ன்படியும், நகர் ஊரமைப்பு ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண் 21724/2016/BA2 நாள் 03.01.2017–ன் உத்தரவின்படியும் மற்றும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971–ன் பிரிவுகள் 56(1) மற்றும் 57 உடன்படிக்கப்பட்ட பிரிவு 85கீழ் Stop work notice/notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிட்டும் Lock and seal and demolition வழங்கவும், இம்மருத்துவமனை கட்டிடத்தின் மீது 2 வருடத்திற்கு முன்பாக புகார் அளித்தும் இதுநாள் வரையிலும் நடவடிக்கை எடுக்கத் தவறிய அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறும் கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் கடிதம் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

ஸ்ரீலட்சுமி மருத்துவமனை கட்டிடத்திற்கு மதுரை மாநகராட்சியால் கட்டிட வரைபட அனுமதி எண்.393/2000, நாள் 03.11.2000ல் வழங்கப்பட்ட கட்டிட வரைபட அனுமதிக்கு மாறாக 2000ல் கட்டப்பட்ட மருத்துவமனை கட்டிடம் மீது இதுவரை மதுரை மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும், இக்கட்டிடத்தில் திறவிடம் விடாமல் கட்டப்பட்டுள்ளதை கண்டறியப்பட்டதால், இம்மருத்துவமனை கட்டிடத்திற்கு மாநகராட்சியில் அனுமதி பெற்ற வரைபடம் மற்றும் ஆவணங்களை 7 தினங்களுக்குள் சமர்ப்பிக்கும்படி தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதியற்ற கட்டுமானங்கள் அகற்றுதல்) விதிகள் 2022, விதி 3–ன் கீழ் 05.02.2026ல் கட்டிட உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு கட்டிட உரிமையாளரிடமிருந்து உரிய ஆவணங்கள் கிடைக்கப்பெறாததால், 16.02.2026 அன்று கட்டிடம் நேராய்வின் போது மாநகராட்சியிடமிருந்து கட்டிடம் கட்டுவதற்கு அங்கீகாரம் பெற்ற வரைபடங்கள் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால், தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதியற்ற கட்டுமானங்கள் அகற்றுதல்) விதிகள் 2022, விதி 5 (a)-ன் கீழ் 20.02.2026–ல் அனுப்பப்பட்டுள்ள அறிவிப்பில் 30 தினங்களுக்குள் கட்டிடத்தை முந்தைய நிலைக்கு மாற்றும்படியும் கட்டிடத்தின் பயன்பாட்டை நிறுத்தும்படியும், தவறினால் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 (2–A)-கீழ் கட்டிடத்தை மூடி முத்திரையிட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள கால அவகாசம் முடிவடைந்த பின்னர் இக்கட்டிடத்தின் மீது உரிய சட்டப்படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் மதுரை மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

மதுரை மாநகராட்சி மண்டலம் 2, (வடக்கு), பெத்தானியாபுரம் மெயின் ரோடு, பைபாஸ் ரோடு, கதவு எண் 87–ல் அமைந்துள்ள நிலத்தினை மருத்துவமனையின் உரிமையாளரால் 1994ம் வருடம் கிரையம் பெற்று ஸ்ரீலட்சுமி மருத்துவமனை கட்டிடம் கட்டப்பட்டு தற்போது வரை இயங்கி வரும், இக்கட்டிடத்திற்கான வரைப்பட நகல் மருத்துவமனையின் வசம் இல்லாததால், வரைப்படத்தின் நகல் கோரி 20.02.2026 அன்று மதுரை மாநகராட்சி நகரதிட்டமிடுநர் அவர்களுக்கு மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், வரைப்படத்தின் நகல் பெறப்பட்ட பின் மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படும் என்பதும் இரண்டாம் எதிர்மனுதாரரான ஸ்ரீலட்சுமி மருத்துவமனை சார்பாக ஆஜராகிய வழக்கறிஞர் திரு. S. மார்ஷல் என்பவரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்ட மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு), பெத்தானியாபுரம், மெயின் ரோடு, பைபாஸ் ரோடு, குரு தியேட்டர் எதிர்புறம் உள்ள கதவு எண் 210 A (87A)-ல் அனுமதிக்கு மாறாகவும், கூடுதலாக கட்டிய கட்டிடத்தில் இயங்கி வரும் ஸ்ரீலட்சுமி மருத்துவமனை கட்டிடத்தின் உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதியற்ற கட்டுமானங்கள் அகற்றுதல்) விதிகள் 2022, விதி 5 (a)-ன் கீழ் 20.02.2026–ல் வழங்கப்பட்ட அறிவிப்பில் 30 தினங்களுக்குள் கட்டிடத்தை முந்தைய நிலைக்கு மாற்றும்படியும் கட்டிடத்தின் பயன்பாட்டை நிறுத்தும்படியும், தவறினால் நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 56 (2–A)-கீழ் கட்டிடத்தை மூடி முத்திரையிட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள கால அவகாசம் முடிவடைந்த பின்னர் இக்கட்டிடத்தின் மீது உரிய சட்டப்படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் மதுரை மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவிப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறும், அனுமதியற்ற கட்டிடங்கள் குறித்து மாண்பமை உச்சநீதி மன்றம் மற்றும் உயர்நீதி மன்றங்கள் வழங்கியுள்ள ஆணைகளில் உள்ள

வழிகாட்டுதலின்படியும் உரிய சட்டபூர்வ தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு, மதுரை மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவி ஆணையரை அறிவுறுத்தமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. R. மயில்சாமி,
பிளாட் எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி, மதுரை

(2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி, மதுரை.

(3) உதவி ஆணையர், மண்டலம் 2 (வடக்கு),
மதுரை மாநகராட்சி,
ரேஸ் கோர்ஸ் ரோடு, மதுரை.

(4) ஸ்ரீலட்சுமி மருத்துவமனை,
கதவு எண் 210 A (87A), பைபாஸ் ரோடு,
பெத்தானியாபுரம், மதுரை–625 016.

(5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

(6) இணை இயக்குநர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.